செ.வெ. எண்: 479 நாள்: 13.08.2012

# செய்தி வெளியீடு

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’’ என்ற பாரதியாரின் வாக்கினை செயல்படுத்த உணவு உற்பத்தியை பெருக்க இன்றியமையாததாக விளங்குவது நீர்ப்பாசனம் ஆகும்.

நீர்ப்பாசனத்தைப் பெருக்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அந்த வகையில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணந்தன்குடி மேலையூர் கிராமத்தில் உள்ள சிங்கநேரி ஏரி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதன் காரணமாக, மழை நீரை அங்கு அதிக அளவு நீர்ப்பாசனத்திற்காக தேக்கி வைக்க இயலாமல், தண்ணீர் வீணாவதை தடுக்கும் வகையில், அந்த ஏரியை 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி ஏரியின் கரையை 5 மீட்டர் அகலத்திற்கு ஒரே சீராக அமைத்தல், ஏரியின் ஒரு மதகை மறு கட்டுமானம் செய்தல், நீரை வெளியேற்ற கூடுதல் மதகு அமைத்து வரத்து கால்வாய்களையும், ஏரியையும் முழுமையாக தூர் வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 189 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பூண்டி அணையில் இரு பக்கமும், அப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதிக்காக, 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மதகுப் பாலம் பழுதடைந்துள்ளதால், அப்பகுதி மக்களின் நன்மைக்காகவும், பூண்டி அணையின் மேல் உள்ள சாலையின் மேல் நடைபெறும் வாகனப் போக்குவரத்தினால் ஏற்படும் அதிர்வுகளினால், அணை கட்டுமானங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும், மாற்று வழியாக இந்த அணையின் கீழ்புறம் உள்ள கொசஸ்தலையாற்றின் குறுக்கே 2 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரைப்பாலம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தத் தரைப் பாலம், இப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், பூண்டி பஞ்சாயத்து சாலை முதல் ரங்கபுரம் கிராமத்திற்கும் இடையே உள்ள கிருஷ்ணபுரம், நயப்பாக்கம், நம்பாக்கம் மற்றும் அரியாத்தூர் கிராமச் சாலைகளை இணைக்கும் விதமாகவும் அமையும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் : - 13.8.2012.